# 3. திருநீலகண்ட நாயனார் புராணம்

திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன் - திருத்தொண்டத்தொகை

சொல்லச் சிவன்திரு வாணைதன் தூமொழி தோள்நடையை
ஒல்லைத் துறந்துரு மூத்தநற் பின்உமை கோன்அருளால்
வில்லைப் புரைநுத லாளோடு இளமை பெற்று இன்பமிக்கான்
தில்லைத் திருநீலகண்டக் குயவனாம் செய்தவனே

- திருத்தொண்டர் திருவந்தாதி

.............. மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன்
அல்லன்.........

- பட்டினத்தார்

1. வேதியர் தில்லை மூதூர்
வேட்கோவர் குலத்து வந்தார்
மாது ஒரு பாகம் நோக்கி
மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடியும் இல்லா
அற்புதத் தனிக் கூத்தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தில் மிக்கார். 360

**பொ.ரை**

தில்லைப் பதியில் விரித்துக் கூறப்பட்ட அந்தணர்கள் வாழ்கின்ற தொல்பெரும் பதியில் அவதரித்தவர். உமையம்மையார் விளங்கிடும் திருஇடத்தை நோக்கிக் கொண்டு, நிறைந்த திருச்சிற்றம்பலத்தின் இடமாக நின்று, ஆதியும் முடிவுமில்லாத அற்புதத் திருக்கூத்தாம் தனிக்கூத்தினை ஆடுகின்ற இறைவனின் திருவடிகளையே என்றும் போற்றி வழிபட்டு வருகின்ற நல்லொழுக்க நெறியிலே தலைசிறந்து விளங்குபவர்.

**விளக்கம்**

வேட்கோவர் - குயவர். மண்ணில் பல கலன்களைப் படைக்கும் குயவர். (நான்முகன் மக்களைப் படைப்பதைப் போல் மட்கலன்களைப் படைப்பவர் குயவர், குலாலர் எனப்படுவர்.) எல்லாக் கூத்துக்களுக்கும் முடிவும் முதலும் உண்டு ஆனால் ஆடல்வல்லான் நிகழ்த்திடும் திருக்கூத்திற்கு இவை இல்லை எனவே 'அற்புதத் திருக்கூத்து' ஆயிற்று.

(சிதம்பரம் திருக்கோயிலின் மேற்குக் கோபுரவாயிலின் அருகேவுள்ள விநாயகர் கோவிலின் வழியாகச் சென்றால் இளமையாக்கினார் திருக்கோயில்.)

இளமையைத் தந்ததால் இக்கோயில் இளமையாக்கினார் கோயில் என வழங்கப்படுகிறது.

வேணுத்தண்டின் - மூங்கில் குச்சி. இருதலை - இருபுறம்.

38. தண்டு இருதலையும் பற்றிப்
புகும் அவர் தம்மை நோக்கி
வெண்திரு நீற்று முண்ட
வேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டு உடன் மூழ்கீர் என்னக்
கூடாமை பாரோர் கேட்கப்
பண்டுதம் செய்கை சொல்லி
மூழ்கினார் பழுது இலாதார். 397

**பொ.ரை**

மூங்கில் குச்சியின் இருபக்கங்களையும் முறையே அடியாரும் அவர்தம் மனைவியாரும் பற்றிக் கொண்டு நீரினுள் மூழ்கத் தலைப்படும் பொழுது வெள்ளிய திருநீற்றைத் திரிபுண்டரகமாகத் தரித்த நின்ற வேதியரான சிவயோகியார் அடியாரைப் பார்த்து 'வேட்கோவரே! உம்மை நான் நும் மனைவியின் கரம் பற்றி நீரில் மூழ்கச் சொன்னேனேயன்றி மூங்கில் தண்டின் தலையைப் பிடித்துக் கொண்டு மூழ்கச் சொல்லவில்லை. இச்செயல் முறையோ! அழகோ! இதற்கு யான் ஒவ்வேன்' என்றார். பொய்மை அறியாத நாயனார், ஆண்டுக் குழுமியிருந்த உலகினர் யாவரும் கேட்கும்படியாக, பண்டுத் தமக்கும், தன் மனைவிக்கும் நிகழ்ந்த செயலைக் கூறி விளக்கி அக்காரணம் பற்றியே தன் மனைவியின் கைத்தலம் பற்றி மூழ்காமைக்கு ஆளாய் உள்ளேன் எனக் கூறி குளத்தினுள் மூழ்கினார்.

**விளக்கம்**

முன்னர் தன்னிலை பற்றிக் கூறிடாத அடியார் இறுதியில் கூறியே ஆக வேண்டும் என்ற நிலை வந்தபோது தங்கள் மாட்டுள்ள பிரமாணத்தை விளக்கினர். இச்செயலும் குடும்பம் நடத்திடும் தலைவர்க்கு ஒரு பாடமாம். நடந்தது நடந்துவிட்டது இனி இறைவனின் குருவருளும் திருவருளும் காப்பதாக என நினைத்து நாயனார் நவின்றார். அந்நிலையில் அவர் மனத்தகத்தே இருந்த எண்ணம் ஆற்றின் பெருவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு சிறு துரும்பிற்கு ஒப்பானது.

என்றும் ஒரே நிலையில் நிற்பவர் திருநீலகண்டர் என்பாராய் பழுது இலார் மூழ்கினார் என்கின்றார் சேக்கிழார் பெருமானார். முண்டம் - திரிபுண்டம் அணிந்த நெற்றி (மூன்று பட்டையாகத் திருநீறு அணிதல்). பண்டு- பழைய. நாயனாரின் மனத்திட்பத்தினையும் அதனால் அவர் கொண்ட வினைத்திட்பத்தினையும் உலகோர் அறியவே சிவயோகியர் வந்து வினவினர் என்க.

அவரும் 'நான் முன்னாள் உன்னிடம் கொடுத்த மிக்க ஒளி கொண்ட அத்திருவோட்டை என்னிடம் மீண்டும் தருக' என்றார்.

**விளக்கம்**

மண் ஓட்டோடு நாயனார் இல்லம் புகுந்தது - ஆக்கல்.

மண் ஓட்டை மறையச் செய்தது - மலநீக்கம்.

சிந்தை செய்து - திருவுளங் கொண்டு. மொய் - மொய்த்த. தந்துநில் - விரைவில் கொடு (ஓட்டினைத் தந்து விட்டு, நிற்க).

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுவதும் யாவையும் (திருச்சதகம் 66)

21. என்று அவர் விரைந்து கூற
இருந்தவர் ஈந்த ஓடு
சென்றுமுன் கொணர்வான் புக்கார்
கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார்
தேடியும் காணார் மாயை
ஒன்றும் அங்கு அறிந்திலார் தாம் 380
உரைப்பது ஒன்று இன்றி நின்றார்.

**பொ.ரை**

திருவோட்டினை எடுத்து சிவயோகிகளிடம் கொடுப்பதற்காக நாயனார் மிக விரைவாக வீட்டினுள் சென்றார்; அவ்வோட்டினைத் தான் வைத்த இடத்திற்குச் சென்ற போது அவ்வோடு அங்கில்லை; அதனால் திகைப்புற்று மதிமயங்கி அங்கு நின்றார்களையும் கேட்டார்; அவர்கள் தாங்கள் அறியோம் என அறிவிக்கத் தாமே பிற இடங்களிலும் தேடினார்; வோட்டினைக் காணாதவராய் 'அந்தோ! ஈதென்ன மாயை' என்றார். 'யோகியார்க்கு என்ன கூறுவது' என அறியாராய் சொல் ஒன்றும் அறியாதவராய் அவ் விடத்திலேயே நின்றார்.

நின்றவர் - அருகே நின்ற மனைவியார். இருந்தவர் - சிவயோகி. நேடியும் - தேடியும்.

22. மறையவன் ஆகிநின்ற
மலைமகள் கேள்வன் தானும்
உறையுளில் புக்குநின்ற
ஒருபெருந் தொண்டர் கேட்ப
இறையில் இங்கு எய்தப் புக்காய்
தாழ்ந்தது ஏன் என்ன வந்து
கறைமறை மிடற்றி னானைக் 381
கைதொழுது உரைக்கல் உற்றார்.

**பொ.ரை**

'நம்பீ! என்னால் கொடுக்கப்படும் இத்திருவோட்டிற்குச் சமமாக ஒரு பொருளையும் கூற முடியாது. தனக்குத்தானே உயர்ந்து விளங்குவது. தன்னிடத்துப் பொருந்திய அனைத்துப் பொருள்களையும் தூய்மையாய் வைக்கும் பெற்றியது. இத்துணைச் சிறப்புக் கொண்ட இதனை நீ எளிதாக எண்ணாதே! பொன்னைப் பார்க்கினும், இரத்தினத்தைப் பார்க்கினும் இது சிறந்து விளங்குவது. இதனை நன்குப் பேணிப் போற்றி வைத்திருக்க வேண்டும். அச்சிறப்புடைய இதனை நீ வாங்கிக் கொள்; தன்னை ஒப்பு அரியது, தனக்கு உவமையுமற்றது இத்திருவோடு' என்றார்.

17. **தொல்லைவேட் கோவர்தம் குலத்துள் தோன்றிய**
**மல்குசீர்த் தொண்டனார் வணங்கிவாங்கிக் கொண்டு**
**ஒல்லையின் மனையில் ஓர் மருங்கு காப்பு உறும்**
**எல்லையில் வைத்துவந்து இறையை எய்தினார்.** 376

**பொ.ரை**

பழமையான குயவர் குலத்துள் அவதரித்த நிறைந்த புகழுடைய திருநீலகண்டரும் சிவயோகிகள் கொடுத்தத் திருவோட்டினைப் பணிந்து இருகரங்களால் வணங்கி வாங்கிக் கொண்டு உடன் அந்நிலையிலேயே வீட்டினுள் சென்று மிக்கக் காவலுள்ள ஓர் அறையில் ஒரு பக்கமாக வைத்து சிவயோகிகள் இருக்கும் இடத்தை அடைந்தார்.

**விளக்கம்**

"திருவோடாகிய திருவருளைச் சிவனார்பால் பெற்று காவலுட்படாத மனத்தகத்துள் வைக்காமல், உணர்வகத்துள் வைத்தார்" திரு. பிள்ளை அவர்கள். தொன்மை - பழைமை நிறைந்த. மல்குசீர் - நிறைந்த புகழினை உடைய. ஒல்லையில் - விரைவில். ஓர் மருங்கு - ஒரு பக்கம். காப்புறும் எல்லையில் - காவல் மிகுந்த இடத்தில். பெரியோர்களிடமிருந்து நாம் பொருளைப் பெரும் பொழுது எப்படிப் பெற வேண்டும் என்பதனைச் சேக்கிழார் பெருமான் கூறும் திறம் காண்க.

18. **வைத்தபின் மறையவர் ஆகிவந்து அருள்**
**நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்**
**உய்த்து உடன்போய்விடை கொண்டு மீண்டனர்**
**அத்தர்தாம் அம்பலம் அணைய மேவினார்.** 377

**பொ.ரை**

அத்திருவோட்டினை ஒருவரும் புகுதற்கு இடமில்லாத காவலுள்ள ஓர் இடத்தில் வைத்துவிட்டு சிவயோகியார் அமர்ந்திருந்த இடத்தை நண்ணினார். மாறுவேடம் புனைந்த வந்த சிவயோகிகள் இடம் பெயர, பணிவுடன்

14. பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டர் என்று
உறையுளில் அணைந்துபேர் உவகை கூர்ந்திட
முறைமையின் வழிபட மொழிந்த பூசைகள்
நிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின். 373

**பொ.ரை**

பிறை வளரும் சடைமுடியினையுடைய இறைவனின் தொண்டராம் என அவ்வடியாரை எண்ணி அவ்வடியாரைத் தம் இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்து அதனால் மகிழ்ச்சி மேலிட தம் உள்ளத்து எழுந்த நிறைந்த பெரிய ஆசையோடு அடியவர்களை எப்படிப் பூசித்திட வேண்டுமோ அம்முறையில் பூசித்து அவர் முன் வணங்கி நின்று.

பிரானை - சிவனை, உறையுளில் அணைத்து - தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று. பேர் உவகை கூர்ந்திட - பெருமகிழ்ச்சி பொங்க.

**விளக்கம்**

அடியாரை உபசரிக்கும் முறை

கொண்டு வந்து மனைப் புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனித்திடை வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலுவிதத்தில் ஆறுசுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துள்ளார்.

15. எம்பிரான் யான்செயும் பணிஎது என்றனர்
வம்புஉலா மலர்ச்சடை வள்ளல் தொண்டனார்
உம்பர் நாயகனும் இவ்ஓடுஉன் பால்வைத்து
நம்பி நீதருக நாம் வேண்டும் போதுஎன்று. 374

**பொ.ரை**

நறுமணங் கமழும் மலர்கள் சூடிய சடைமுடியினையுடைய வள்ளலாகிய இறைவனின் தொண்டராம் திருநீலகண்டநாயனார் 'எங்கள் பிரானே! அடியவன் தங்கட்குச் செய்யத் தக்க பணியாதோ?' என வினவிட சிவயோகியராகிய வந்த அவரும் 'நம்பீ! என்னிடமுள்ள இத்திருவோட்டை இப்பொழுது உன்னிடம் கொடுக்கின்றோம்; அதனை நீ வைத்திருந்து நாம் வேண்டும்போது நீ கொடுக்கக் கடவாய்' என்றார். வம்பு உலா - மணம் வீசும். வள்ளர் தொண்டர் - சிவபிரானின் தொண்டர். நம்பீ - ஆடவரின் சிறந்த திருநீலகண்டரே!

16. தன்னைஒப்பு அரியது தலத்துத் தன்உழைத்
துன்னிய யாவையும் தூய்மை செய்வது
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது 375
இன்ன தன்மையதுஇது வாங்கு நீ என.

**பொ.ரை**

அரைஞாணோடு கூடிய கோவணத்தைத் தரித்து கேடில்லாத ஒளி வீசும் திருநீற்றினைத் திருமேனியில் விளக்கமுறப் பூசி, திருமேனியில் தோளோடு சேர்ந்த மார்பினிடத்தில் துவண்டு அசையும் பூணூல் உடன் விரிகின்ற அந்நீற்றொளியே வளரும் திருமுண்டமாகிய நெற்றியில்.

கீளொடு கோவணம் - அரைஞாணோடு கூடிய கோவணம். வான்விடு நீற்றொளி - ஒளிவீசும் திருநீற்றின் தெய்வத் தன்மை. திருமுண்டம் - திரிபுண்டராம் அணிந்த.

12. **நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்**
**விடும்கதிர் முறுவல் வெண் நிலவும் மேம்பட**
**இடும்பலிப் பாத்திரம் ஏந்து கையராய்** 371
**நடந்துவேட் கோவர் தம்மனையில் நண்ணினார்.**

**பொ.ரை**

நீண்ட சடைகொண்ட தம் தோற்றம் மறையும்படி தூறுபோல் நெறிந்திருக்கின்ற சடைமுடியினை உடையவராயும், வெள்ளிய நிலவினும் ஒளிவீசும் புன்னகை உடையவராயும், அன்பர்களிடும் பலியை ஏற்பதற்குரிய ஒரு திருவோட்டினையும் ஏந்திய கையினராய் நடந்து வந்து திருநீலகண்டக் குயவனார் வீட்டினை அடைந்தார்.

கரந்திட - மறையும்படி. நெறித்த பம்பையும் - சிலிர்த்துச் சுருண்டு கீழ் விழாமல் தூறாயிருக்கின்ற தலைமுடியும். ஒளிவீசும் - பற்களின்று தோன்றும் வெண்ணிலவும். பலிஇடும் பாத்திரம் - பிச்சை ஏற்கும் பாத்திரம். வேட்கோவர் - திருநீலகண்டர்.

13. **நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்**
**கண்ணுற நோக்கிய காதல் அன்பர் தாம்**
**புண்ணியத் தொண்டர் ஆம் என்று போற்றி செய்து**
**எண்ணிய வகையினால் எதிர்கொண்டு ஏத்தினார்.** 372

**பொ.ரை**

தம் இல்லத்தை நோக்கி மெய்தவத்தில் சிறந்த சிவயோகநாதராம் தேவனைக் கண்ணாரக் கண்ட அன்பர்பால் ஆசையையுடைய அன்பராகிய திருநீலகண்டர், சிவபுண்ணியமே ஓர் உருக்கொண்டு வந்த திருமேனியராம் என தம்முள்ளத்தில் எண்ணிய அகமகிழ்ச்சியால் எதிர்கொண்டு சென்று வாயாரப் புகழ்ந்து வணங்கிப் போற்றினர்.

அன்பர் - திருநீலகண்டர்.

**பொ.ரை**

இளமைப் பருவம் மிகுந்த அவ்விருவருக்குமே தெரிய நிகழ்ந்து அயலூர் ஒன்றும் அறியாது நின்றதாகிய அளவற்ற சிறப்புக் கொண்ட அவ்வாணையைக் கடவாமல் பேணிக் கொண்டு இந்நிலை போல் பலப்பல ஆண்டுகள் கழிந்திட, உடல்வளம் குன்றி இளமை நீங்கி மூப்பு எய்திட அதனால் தளர்ச்சியுற்று, கோல் கொண்டு நடக்கும் தன்மை வந்தெய்து போதும் கொண்ட கொள்கையில் மாறாது பெருமான் திறத்தில் வைத்த அன்பும் மீறாத - மாறாத - நிலையில் விளங்கினர்.

வடிவுறு மூப்பு - உடலிலே கொண்ட மூப்பு. தம்பிரான் இடத்தில் - இறைவனிடத்தில்.

10. இந்நெறி ஒழுகும் நாளில்
    எரி தளிர்த்து என்ன நீண்ட
மின்ஒளிர் சடையோன் தானும்
    தொண்டரை விளக்கம் காண
நல்நெறி இதுஆம் என்று
    ஞாலத்தார் விரும்பி உய்யும்
அந்நெறி காட்டும் ஆற்றால்
    அருள்சிவயோகி ஆகி. 369

**பொ.ரை**

மூப்புற்று உடல் தளர்ந்த நிலையிலும் சைவநெறியினின்று வழுவாது நடந்து வருநாளில் தீயானது தளிர்விட்டாற் போன்ற சிவந்த நீண்ட மின்னலைப் போல ஒளிரும் சடையோனாகிய இறைவரும் நன்னெறி எனப்படும் சன்மார்க்க நெறி இதுவாமென உலகினர் அறிந்து அதனையே விரும்பி அவ்வழியான் உய்யும் வகையாகிய அந்நெறியே இந்நெறியாம் என உணரும் வகையான் நம் பெருமானாகிய ஈசன் நாயனாரை ஒளி வீசச் செய்ய திருவுளம் கொண்டு அருள்நிறைந்த ஒரு சிவயோகியைப் போல திருவடிவு கொண்டு.

எரிதளிர்த்தென்ன - தீ கொழுந்துவிட்டாற் போல. சடையான் - சிவன். விளக்கம் காண - சோதிக்க. (இத்தன்மையரென பிறர்க்குக் காட்ட.) ஞாலத்தார் - உலகோர். அந்நெறி - அந்த பக்தி வைராக்கிய வழி.

**கலி விருத்தம்**

11. கீளொடு கோவணம் சாத்திக் கேடுஇலா
வான்விடு நீற்று ஒளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீள்ஒளி வளர்திரு முண்ட நெற்றியும். 370

பிழைப்பைக் கெடுக்கும்' என்பது உலக வழக்கு. மனத்தால் எண்ணுபவனை - திருட வேண்டும் என்று நினைப்பவனை - பிடிக்க முடியாது. திருடன் என்றும் அவனைக் கூற முடியாது. மனத்தால் நினைப்பவனைத் தவிர பிறர் அவன் செயலை அறியார். அதனாற்றான் அறத்தை வலியுறுத்த வந்த தெய்வப்புலவர் **மனத்தின் கண் மாசு இலன் ஆதல்** என்றார். இம்முறையில் நாயனார் பெண்களை 'மனத்திலும் தீண்டேன்' என்றார். பின்னர் வரும் 26ஆம் பாடலில் 'உளத்திலும் களவு இலாமைக்கு' என வருவதும் காண்க.

'இப்பிறப்பிற்கு இருமாந்தரை என் சிந்தையாலும் தொடேன்' என்றான் இராமன். இதுவே அவரின் மனத்திட்பம்.

8. **கற்பு உறுமனைவி யாரும்**
**கணவனார்க்கு ஆன எல்லாம்**
**பொற்புஉறு மெய்உறாமல்**
**பொருந்துவ போற்றிச் செய்ய**
**இப்புறம் பொழியாது அங்கண்**
**இருவரும் வேறு வைகி**
**அற்புஉறு புணர்ச்சி இன்மை** 367
**அயல் அறியாமை வாழ்ந்தார்.**

**பொ.ரை**

கற்புடை மனைவியாரும் தம் கணவருக்கு வேண்டிய அனைத்துப் பணிவிடைகளையும் அழகுற, தம்மேனி அவர் திருமேனிமேல் படாமல் பேணிப் போற்றிச் செய்திட இல்வாழ்க்கைக்கு வேண்டிய செய்கைகளைச் சோர்வின்றிக் காத்துச் செய்து வந்தார். தம் இல்லினின்று வெளி நீங்காது, அவ்வில்லிலேயே இருவரும் தனித்தனி வாழ்வார்களாகி மெய்யுறு புணர்ச்சியின்றி அன்பு செலுத்துதலில் குறைவின்றி, அயலார் ஒருவரும் தங்கள் நிலை அறியாமல் இருந்திட வாழ்ந்து வந்தனர்.

வெவ்வேறாய் - வேறு வேறாய். வைகி - தங்கி. இறப்புறம்பு ஒழியது - வீட்டினை விட்டுப் புறஞ்செல்லாது.

9. **இளமையின் மிக்கு உளார்கள்**
**இருவரும் அறிய நின்ற**
**அளவுஇல்சீர் ஆணை போற்றி**
**ஆண்டுகள் பலவும் செல்ல**
**வளம்மலி இளமை நீங்கி**
**வடிவு உறு மூப்பு வந்து**
**தளர்வொடு சாய்ந்தும் அன்பு** 368
**தம்பிரான் திறத்துச் சாயார்.**

திருநீலகண்டத்தின் மேல் ஆணை நும்மேல் இருக்கக் கடவது என ஆணையிட்டனர்.

**என்னை** என்று இயம்பாது **எம்மை** எனக் குறித்தது காண்க. எம்மை - ஒருமைத் தன்மைப் பன்மை. எம்மை எனக் கூறியதை நாயனார் எங்களை - பெண் இனத்தை எனக் கொண்டார். மூண்ட - உதித்தெழுந்த. அப்புணி - அப்பிணக்கை. அன்பனார் - திருநீலகண்ட நாயனார். பூண் தயங்கு - ஆபரணங்கள் விளங்கும். இளமை - மென்மை. சாயல் - ஐம்பொறியால் நுகர்தல். அனையார் தம்மை - மனைவியாரை மெய்யுற அணைய.

7. ஆதியார் நீலகண்டத்து
அளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட
பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி
எம்மை என்றதனால் மற்றை
மாதரார் தமையும் என்தன்
மனத்திலும் தீண்டேன் என்றார். 366

பொ.ரை

முழு முதற் கடவுளான சிவபிரானின் திருநீலகண்டத்தின் அளவிலே தாம் மேற்கொண்ட ஆசையானது வேறு எதனாலும் அதனைக் கடக்க செய்யலாற்றாத திருவாணையைக் கேட்ட பெரியோராகிய நாயனார், மெய்யுற அணையும் நிலையினின்று ஒதுங்கி, அம்மையாரைத் தம் துணைவியாராகக் காணாது அயலாரைப் போல் நோக்கி எம்மை என்று உளப்படுத்திப் பன்மையாகக் கூறியதினால் உம்மை மட்டுமல்ல உம் இனமான பெண் இனத்தையே என் மனத்தாலும் தீண்டேன் என்றார்.

விளக்கம்

மனத்தாலும் தீண்டேன் விரிவு காண்போம்.
உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். (282)

பிறர்க்குரிய பொருளை திருடுதல் கூடாது. மனதால்கூட திருடி விடுவோம் என நினைத்தல் திருட்டிலும் பெரிய குற்றம்.

பிறர் பொருளைத் திருடும் பொழுது கையும் களவுமாகப் பிடிபடுவர். ஆனால் மாற்றான் பொருளைத் திருடி விடுவோம் என்று ஒருவன் மனத்தால் நினைப்பின் அத்திருட்டு எண்ணம் எண்ணியவனைத் தவிர பிறர்க்குத் தெரியுமோ? தெரியாது. மனத்தால் நினைத்திடும் எண்ணமே பின்னொரு நிலையில் ஒருவரும் அறியா நிலையில் திருட முற்படும். எனவே திருட்டிற்கு மூலமுதற் காரணமாய் இருப்பது மனத்தால் நினைப்பது. 'நினைப்பு

5. ஆனதம் கேள்வர் அங்குஓர்
    பரந்தைபால் அணைந்த நண்ண
மானமும் பொறாது வந்த
    ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாம் செய்தே
    உடன் உறைவு இசையார் ஆனார்
தேன் அலர்கமலப் போதில் 364
    திருவினும் உருவம் மிக்கார்.

**பொ.ரை**

தேன் விளங்கும் செந்தாமரையில் விளங்கும் திருமகளைவிட அழகிற் சிறந்து விளங்கும் துணைவியார், மேற்குறித்த இயல்புடையராயின தம் கணவனார் ஒரு நாள் ஒரு பரத்தையிடம் சென்று அணைந்து வர அதனால் எழுந்த மானத்தினால் எழுந்த மனவருத்தத்தை ஆற்றமாட்டாதவராய் மேற்கொண்ட ஊடலில் மனை வாழ்க்கையில் செய்ய வேண்டுவனவாகிய அனைத்துக் கடமைகளையும் விதிப்படி செய்து முடித்துத் தன் கணவனாருடன் மெய்யுறு ஒன்றினை மட்டும் தவிர்த்து இசையாதவராயினர்.

மெய்யுறு புணர்ச்சி - உடலுறவு. இணைவிழுச்சு. நண்ண - ஒரு விலைமாதினிடம் கூடி.

தேன் அலர்......உருவினும் மிக்கார் என்பதில் இவரின் துணைவியார் பேரழகு வாய்க்கப்பட்டிருந்தும் நாயனார் பரத்தை நாடிச் சென்றது தவறு என்பதாம்.

6. மூண்ட அப்புலவி தீர்க்க
    அன்பனார் முன்பு சென்று
பூண் தயங்கு இனமென் சாயல்
    பொன்கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி
    மெய் உற அணையும் போதில்
தீண்டுவீர் ஆயின் எம்மைத் 365
    திருநீல கண்டம் என்றார்.

**பொ.ரை**

மானமுன் பொறாது வந்து மூண்டதாகிய அப்புலவியைத் தீர்த்துக் கூடும் பொருட்டு அன்புடையவராகிய நாயனார் தம் அழகிய மனைவியார் முன்னேபோய் வேண்டுவனவற்றையெல்லாம் பணிவுடன் இரந்து சொல்லி அதனால் அவர் அப்புலவி தீர்ந்தார் என்று கொண்டு அவரின் அழகிய திருமேனியைத் தழுவப் புக்க நிலையில் நீவிர் எம்மைத் தீண்டுவீர் ஆனால்

வளர்பிறையை அணிந்த இறைவனின் அடியார்களுக்குத் தேவையான கலன்களையே அவர்கள் எப்போதும் மகிழ்ந்து பெறும்படி மிகுதியாகக் கொடுத்து வாழும் நாளில் இளமை அதிகமானதினால் சிற்றின்பத்துறைக்கு எளியராயினார்.

**விளக்கம்**

கணக்கிட முடியாத குடிவழி யாதலின் 'அளவிலா மரம்' என்றார். அமுது ஆக்கி. உணவிற்காக மட்கலன்கள் ஆக்கி. அமுதமாகிய மண்கலன்கள்.

இளமைக்கும் இன்பத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு.

**இளமையிற் சிறந்த வளமையும் இல்லை; இளமை கழிந்த**
**பின்றைவன்மை; காமம் தருதலும் இன்றே** - நற்றிணை. 126.

**அற்றார்க் கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள் மூத்தற்று** (1007) என்ற குறள் இளமையையும் அதில் துய்க்கப் பெறும் இன்பத்தையும் விளக்கும் திறன் காண்க. 'சிற்றின்பம் வெஃகும் காலம் இளமையே' யாதலால் 'இளமை மீதூர இன்பத்துறையில் எளியர் ஆனார்' என்றார். மல்க - பெருக.

4. **அவர் தங்கண் மனைவி யாரும்**
**அருந்ததிக் கற்பின் மிக்கர்**
**புவனங்கள் உய்யஐயர்**
**பொங்கு நஞ்சு உண்ண யாம்செய்**
**தவம் நின்று தடுத்தது என்னத்**
**தகைந்து தான் தரித்தது என்று**
**சிவன் எந்தை கண்ட தன்னைத்**
**திருநீல கண்டம் என்பார்.** 363

**பொ.ரை**

அவர் தம் துணைவியாரும் அருந்ததியின் மிக்க கற்பனையுடையராகப் பெற்றார், உலகம் உய்யும் பொருட்டுப் பாற்கடலில் பொங்கி மேலெழுந்த நஞ்சினை இறைவன் அமுது செய்ய (அந்நஞ்சு உட்புகாமல் எமக்கெல்லாம் அறிகுறியாக விளங்கி இருக்கும்படி) நாங்கள் செய்த தவப்பேறு அம்மட்டில் நின்றிடும்படி தடுத்தியதோ என்று கூறும்படி, இந்தக் கண்டமல்லவா அதனைத் தடுத்துத் தானே தரித்து நிற்கின்றது என்ற கருத்தினால் சிவனாராகிய எம்இறையின் கழுத்தையே எப்பொழுதும் எண்ணுவாராய் திருநீலகண்டம் என்றே போற்றி வருவாராயினர்.

**விளக்கம்**

**தீதிலா வடமீன் திறம்** என்பார் இளங்கோவடிகள் அருந்ததியின் கற்பை. (வசிட்டரின் மனைவி) அருந்ததி போன்ற கற்பினாள் நாயனார் மனைவி. சிவன் எந்தை - உலகத்து வாழ்வார் அனைவர்க்கும் தந்தையார் சிவன். **அத்தன் முத்தன் சிவன்** (358) எனக் கூறும் திருக்கோவையாரும்.

ஐயர் - சிவன். தகைத்து - தடுத்து. தான் - கண்டம்.

2. பொய்கடிந்து அறத்தின் வாழ்வார்
புனல்சடை முடியார்க்கு அன்பர்
மெய்யடியார்கட்கு ஆன
பணிசெயும் விருப்பில் நின்றார்
வையகம் போற்றும் செய்கை
மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே
பொருள் எனச் சாரும் நீரார். 361

**பொ.ரை**

பொய்மையை ஒழித்து அறநெறி வாழும் அற்புதர். கங்கையைத் தரித்த முடியையுடைய சிவனாரின் உண்மை அடியார்களுக்கு வேண்டுவனவாகிய அனைத்துப் பணிவிடைகளைச் செய்யும் விழைவில் மிக்கவர். உலகில் சிறந்ததாகக் கொண்டொழுகப் பெறும் இல்லற முறை நெறிப்படி வழுவாமல் பணியாற்றி வாழும் சீலர். சைவத்தின் உண்மைச் செல்வத்தின் சார்பே பொருளாவது என உணர்ந்து சார்ந்து ஒழுகிடும் தன்மையாளர் வாழ்வில் பொய்மை நீக்கி மெய் கொண்டவர்.

**விளக்கம்**

சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க திருவைந்தெழுத்து, திருநீறு, உருத்திராக்கம் ஆகியவையையே பொருளாகக் கொண்ட்வர். இவையே உண்மைப் பொருள். பிற பொருளெனத் தோன்றினும் பொருளாகா. அதனால் 'பொருளல்லவற்றைப் பொரு ளென்றுணரும் மாணாப் பிறப்பினை' விட்டொழித்தார்.

அறம் - மனையறம். இல்லறம் அல்லது நல்லறமன்று. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை. நீரார் - பெருமையுடையவர்.

3. அளவு இலா மரபின் வாழ்க்கை
மண்கலம் அமுதுக்கு ஆக்கி
வளர் இளத் திங்கள் கண்ணி
மன்று உளார் அடியார்க்கு என்றும்
உளம் மகிழ் சிறப்பின் மல்க
ஓடு அளித்து ஒழுகும் நாளில்
இளமை மீது ஊர இன்பத்
துறையினில் எளியர் ஆனார். 362

**பொ.ரை**

அளவிடக்கிட்டாத பரம்பரையில் தம் குடி வழியே நின்று செய்து வந்த தொழிலிலே செய்திடும் மண்கலன்களைத் தம் இல்வாழ்க்கையின் வாழ்விற்குத் தேவையான அளவில் மட்டுமே ஆக்கிக் கொண்டு,

28. ஐயர்நீர் அருளிச் செய்த
  வண்ணம் யான் செய்வதற்குப்
பொய்இல் சீர்ப் புதல்வன் இல்லை
  என் செய்கேன் புகலும் என்ன
மைஅறு சிறப்பின் மிக்க
  மனையவள் தன்னைப் பற்றி
மொய் அலர் வாவி புக்கு
  மூழ்குவாய் என மொழிந்தார். 387

**பொ.ரை**

'ஐயன்மீர்! தாங்கள் கூறிய முறையில் பொய்மை அற்ற அழகிய மகன் எனக்கில்லை. வேறு முறையில் நான் செய்ய வேண்டிய பிரமாணத்தைப் புகல்வீராக' என்றார். 'குற்றமற்றவளும் சிறப்புத்தன்மை மிக்கோளுமாகிய நின் மனைவியின் கரம் பற்றி தாமரைகள் மலர்ந்துள்ள இவ்வழகிய குளத்தினுள் மூழ்கிச் சத்தியம் செய்' என்றார்.

மைஅறு - குற்றமற்ற. மொய் அலர் - நெருங்கிய தாமரை மலர் நிரம்பிய.

**கொச்சகக்கலி**

29. கங்கை நதி கரந்தசடை கரந்தருளி எதிர்நின்ற
வெங்கண் விடையவர் அருளவேட்கோவர் உரைசெய்வார்
எங்களில் ஓர்சபரத்தால் உடன் மூழ்க இசைவு இல்லை
பொங்கு புனல் யான்மூழ்கித் தருகின்றேன் போதும் என. 388

**பொ.ரை**

சடையினில் கங்கையை மறைத்து வைத்திருக்கும் சடையினையுடைய சிவயோகியாரும் தம் எதிர்நின்ற அடியாரை கொடிய சிவந்த கண்ணினை உடைய இடபவாகனர் 'நீ மனைவியின் கரம் பற்றியே இக்குளத்தில் மூழ்கி சத்தியம் செய்தல் வேண்டும்' எனக் கூறியதைக் கேட்ட அடியாரும் 'எனக்கும் என் மனையாட்டிக்கும் ஒரு சபதம் உண்டு. அதனால் ஒருவர் கையை ஒருவர் பற்ற மாட்டோம். அதனால் இக்குளத்தில் மூழ்கி தாங்கள் கூறியபடி பிரமாணம் செய்தல் முடியாது. யான் ஒருவன் மட்டும் இந்நீரில் மூழ்கிச் சத்தியம் செய்வன்' என்றார்.

நீலகண்டம் என்று கூறிவந்த ஆணையை நீலகண்டன் வந்த காலத்தும் பேதியாமையைக் காட்டியதென்க.

கரந்த - அடங்கிய. கரந்தருளி - மறைத்தருளி. விடையவர் - சிவன். புனல் - நீர்.

நின்றிருந்த நாயனாரும் அவருடன் சென்று வழிவிட்டு விடைபெற்றுத் தம் இல்லம் திரும்பினார் இறைவனும் தன் இடமாகிய அம்பலம் சென்றார்.

உய்த்து - அவரைச் செலுத்தித் தாமும். அத்தர் - நடராசர்.

### அறுசீர் விருத்தம்

19. சாலநாள் கழிந்த பின்பு
    தலைவனார் தாம் முன்வைத்த
கோலம் ஆர் ஓடுதன்னைக்
    குறிஇடத்து அகலப் போக்கிச்
சீலம் ஆர் கொள்கை என்றும்
    திருந்து வேட் கோவர் தம்பால்
வாலிது ஆம் நிலைமை காட்ட
    முன்பு போல் மனையில் வந்தார். 378

**பொ.ரை**

இந்நிலையில் நாள்கள் பல செல்ல இறைவனார் தாம் முன்னாளில் நாயனாரிடம் கொடுத்து வைத்திருந்த அழகிய திருவோட்டினை, அது வைக்கப்பட்டிருந்த இடத்தினின்றும் அகன்றிடச் செய்து, சிவநெறிகாத்து வாழும் அச்சிறப்பான ஒழுக்கத்தின் என்றும் குறையாது திருத்தமுற நின்று வாழும் குயவனாரிடம் விளக்கிய உண்மை நிலையை உலகினர்க்கு உணர்த்த வேண்டி முன்பு போலவே அவர் மனையுள் எழுந்தருளினார்.

சாலநாள் - பலநாள். கோலம் - அழகு. வாலிதாம் நிலைகாட்ட - தூய்மை யான உறுதி நிலையை உலகிற்கு உணர்த்த. (வாலறிவன் - மெய்யுணர்வினை யுடையவன் - பரிமேலழகர்; விளங்கின அறிவினையுடையான் - மணக்குடவர்.)

20. வந்தபின் தொண்ட னாரும்
    எதிர் வழிபாடு செய்து
சிந்தை செய் தருளிற்று எங்கள்
    செய்தவம் என்று நிற்ப
முந்தை நாள்உன் பால்வைத்த
    மொய்ஒளி விளங்கும் ஓடு
தந்துநில் என்றான் எல்லாம்
    தான் வைத்து வாங்க வல்லான். 379

**பொ.ரை**

முன் ஓடளித்த இறைவனார் தம் மாளிகைக்கு வந்ததை அறிந்த நாயனாரும் அவரை மிகுந்த ஆவலுடன் எதிர்வந்து அழைத்து வணங்கி, தாங்கள் 'எளியேனையும் மதித்து இம்மனை நோக்கி வந்தது நாங்கள் செய்த தவப்பேறாம்' எனக் கூற அனைத்தையும் கொடுத்து வாங்க வல்லோனாகிய

39. வாவியின் மூழ்கி ஏறும்
    கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி
    விருப்பு உறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும்
    சிறப்பொடு பொழியும் தெய்வப்
பூவின்மா மழையின் மீள
    மூழ்குவார் போன்று தோன்ற. 398

**பொ.ரை**

சிவயோகியார் ஆணையை நிறைவேற்ற குளத்தினுள் தண்டு பிடித்து மூழ்கிய நாயனாரும் அவர் தம் மனைவியாரும் தங்களின் முதுமை யென்பதின்றும் நீங்கி விருப்பப்படும் நல்இளமைப் பருவமுற்று நீரின்றும் வெளிவந்தனர் (முதுமை மூழ்கியது; அவர்கள் பால் இருந்த குளுரையும் மூழ்கியது. புறந்தூய்மை நீரால் அமைவதுபோல புதுப்பொலிவோடு இருவரும் எழுந்தனர்). இவ்வதிசயத்தைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் பெருமையோடு கற்பக மலர்களைத் தூவினர். (திருமஞ்சனத்திற்குப் பின் மலர்வழிபாடாற்றுதல் என்ற முறைக்கிணங்க நீராடிய அவர்களை விண்ணில் உள்ளோர் மலர்வழிபாடாற்றி வணங்கினர்) இம்மலர் மாரி மீண்டும் ஒரு முழுகலை ஒத்திருந்தது.

**விளக்கம்.**

சிற்றின்பத்தைத் துய்த்தற்குரியது இளமை. அவ்விளமை இவ்விருவர் பாலும் கொன்னே கழிந்தது. எனவே அவ்வின்பம் பெற்றுத் துய்க்க இளமையாயினர்.

கனியால் அச்சங் கொண்ட தத்தன் புனிதவதியாரைத் தெய்வமென வணங்கினான். அம்மையும் கணவன் விரும்பா உடல் எனக்கு எற்றுக்கு. பிறர் பார்க்கும் தீய நோக்கும் தம் மீது படுதல் கூடாது என்று எண்ணிய முதுமை கொண்ட பேயுடலைப் பெற்றதைச் சிந்திக்க.

ஆணையைக் காக்க இளமை வீணாகியது. அவ்விளமை மீண்டும் இறைவனால் தரப்பட்டது.

40. அந்நிலை அவரைக் காணும்
    அதிசயம் கண்டார் எல்லாம்
முன்னிலை நின்ற வேத
    முதல்வரைக் கண்டார் இல்லை
இந்நிலை இருந்த வண்ணம்
    ஏன் என மருண்டு நின்றார்
துன்னிய விசும்பின் ஊடு
    துணையுடன் விடைமேல் கண்டார். 399

**பொ.ரை**

நீரில் மூழ்கி மலர் மழையில் நனைந்து இளமையோடு விளங்கும் நாயனாரையும் அவர்தம் மனைவியையும் கண்டு அதிசயத்து வணங்கி. இந்நிலைக்குக் காரணமாய் நின்ற சிவயோகிகளை யாரும் காணாதவராய் நின்றனர். நாயனாரும் இவ்வாறு நிகழ்ந்த வண்ணம்தான் யாது? என மருண்டு நிற்க ஆகாயத்தில் உமைபங்கனாய் இடபவாகனத்தில் பெருமான் காட்சி நல்கினான்.

அண்டரும் - தேவரும். அன்பர் - நாயனார். நின்றார் - நின்றவர். விசும்பினோடு - விண்வழியே. துன்னிய - ஆணைய. துணையுடன் - உமையம்மையுடன். விடை - இடபம்.

41. **கண்டனர் கைகள் ஆரத்**
**தொழுதனர் கலந்த காதல்**
**அண்டரும் ஏத்தினார்கள்**
**அன்பர் தம் பெருமை நோக்கி**
**விண்தரும் பொலிவு காட்டி**
**விடையின் மேல் வருவார் தம்மைத்**
**தொண்டரும் மனைவி யாரும்**
**தொழுது உடன் போற்றி நின்றார்.** 400

**பொ.ரை**

அங்குக் குழுமியிருந்த மக்கள் அனைத்தையும் கண்ணாரக் கண்டார்கள். மிகுந்த மனநிறைவோடு கைகளைக் கூப்பி வணங்கினார்கள். நாயனாரின் பெருமையை அறிந்து தேவர்களும் போற்றினார்கள். விண்ணில் பொருத்தமுற இடபத்தில் மங்கையுடன் இறைவன் தந்த திருக்காட்சியைத் தொண்டரும் அவர் தம் துணைவியாரும் தொழுதும் உடன் வணங்கியும் நின்றனர்.

அண்டர் - தேவர். அன்பர் - அடியார். விண்டு - விண்.

42. மன்றுளே திருக்கூத்து ஆடி
அடியவர் மனைகள் தோறும்
சென்று அவர் நிலைமை காட்டும்
தேவர்கள் தேவர் தாமும்
வென்ற ஐம்புலனால் மிக்கீர்
விருப்புடன் இருக்க நம்பால்
என்றும் இவ்இளமை நீங்காது
என்று எழுந்தருளினாரே. 401

30. தந்தது முன் தாராதே
கொள்ளாமைக்கு உன் மனைவி
அம்தளிர்ச் செங்கை பற்றி
அலைபுனலில் மூழ்காதே
சிந்தை வலித்து இருக்கின்றாய்
தில்லை வாழ் அந்தணர்கள்
வந்து இரந்த பேர் அவையில்
மன்னுவன்யான் எனச் சென்றார். 389

பொ.ரை

'யான் நீரில் மூழ்கிச் சத்தியம் செய்வேன்' எனக் கூறிய நாயனாரை நோக்கி சிவயோகியார் 'நீ கூறுவது மிக்க அழகு! நான் முன் உன்னிடம் கொடுத்த ஓட்டினைத் திருப்பிக் கொடுக்காமலும், உன் மனைவியின் கைத்தலம் பற்றி அலைவீசும் இக்குளத்தில் மூழ்கி பிரமாணம் செய்யாமலும் உன் மனத்தில் மிகவும் வன்கண்மை கொண்டுள்ளாய். இதுபற்றி தில்லைவாழ் அந்தணர் கூடி இருக்கும் திருச்சபையில் உன் நிலையையும் என் நிலையையும் எடுத்து இயம்பப் போகின்றேன்' என்றார்.

கொள்ளாமைக்கு - நீர் கவர்ந்து கொள்ளாமைக்கு. அந்தளிர் - அழகிய தளிர் போன்ற. சிந்தை வலித்து - மனத்தில் வன்கண்மை.

31. நல்லொழுக்கம் தலைநின்றார் நான்மறையின் துறைபோனார்
தில்லைவாழ் அந்தணர்கள் வந்து இருந்த திருந்து அவையில்
எல்லை இலான் முன்செல்ல இரும் தொண்டர் அவர்தாமும்
மல்கு பெரும் காதலினால் வழக்குமேல் இட்டு அணைந்தார். 390

பொ.ரை

சிவயோகியார் கூறியபடியே நல்லொழுக்கத்தில் சிறந்து வாழும் வைதீகச் சைவர்களாகிய, நான்மறைகளில் கூறப்படும் அறத்துறைகளை ஆராய்ந்தறியும் திட்பநுட்ப வல்லோர்களாகிய தில்லைவாழ் அந்தணர்கள் கூடி விளங்கும் திருச்சபையில் தனக்கோர் அளவில்லாதவராகிய சிவ யோகியார் முன்னே செல்ல பெருந்தொண்டராகிய நாயனார் அவர்பின் செல்ல இருவரும் சபையை அடைந்தனர். (வாதி - இறைவன்; பிரதிவாதி - நாயனார்) அறநிலை பிறழாதார் என்பதற்கு நான்மறையின் துறைபோனார் என்றார்.

மல்கு - நிறைந்த வழக்கின் பொருட்டு.

32. அந்தணனாம் எந்தைபிரான் அருமறையோர் முன்பகர்வான்
இந்தவேட்கோவன் பால் நான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழி யான் கெடுத்தானேல் தன்மனைவி கைப்பற்றி
வந்து மூழ்கியும் தாரான் வலிசெய்கின்றான் என்றார். 391

பொ.ரை

திருஅம்பலத்தில் திருநடனம் கொண்டு அடியார்களின் இல்லம் தோறும் சென்று அவர்களின் உண்மை நிலையினை உலகறியக் காட்டுகின்ற தேவாதி தேவனாகிய சிவனும் அடியாரையும் அவர்தம் மனைவியையும் நோக்கி 'வென்று அடிப்படுத்தப்பட்ட ஐம்புலன்களினாலே மிக்கு விளங்குபவர்களே! நீங்கள் இப்போது எம்அருளால் இளமை மீளப்பெற்று நீங்கா இன்பம் துய்த்து எம்மிடத்திலே இருப்பீர்களாக' என்றருளினார்.

அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை - குறள் 343.
ஒருமையுள் ஆமைபோல் ஐந்து அடக்கல் - குறள் 126.

என்ற முறையில் ஐம்புல் அடக்கலில் வெற்றி கண்டவர் நாயனார். சண்டீசரைச் சொல்லும் பொழுது சேக்கிழார் சுவாமிகள்,

தம்மை ஐந்து புலனும் பின்செல்லும் தகையர் எனக் கூறுவர்.

43. விறல்உடைத் தொண்டனாரும்
வெண்நகைச் செவ்வாய் மென்தோள்
அறல் இயல் கூந்தலாள் ஆம்
மனைவியும் அருளின் ஆர்த்த
திறல் உடைச் செய்கை செய்து
சிவலோகம் அதனை எய்திப்
பெறல்அரும் இளமை பெற்றுப்
பேரின்பம் உற்றார் அன்றே. 402

பொ.ரை

வலிமை பெற்ற தொண்டரும், மனைவியாரும் இறைவன் அருளினால் நிறைந்த திறமையான அரிய செயல்கள் செய்ததின் விளைவாய் சிவஉலகை அடைந்து பிறர் எவராலும் எய்துதற்கரிய இளமையைப் பெற்று அப்போதே பேரின்பத்தையும் அடைந்து விளங்கினார்கள்.

விறல் - பக்தி வைராக்கிய வலிமை. இயல் - கருமணல்.

44. அயல் அறியாத வண்ணம்
அண்ணலார் ஆணை உய்த்த
மயல்இல் சீர்த் தொண்டனாரை
யான் அறிவகையால் வாழ்த்திப்
புயல்வயர் மாடம் நீடும்
பூம்புகார் வணிகர் பொய்யில்
செயல் இயற்பகையார் செய்த
திருத்தொண்டு செப்பல் உற்றேன். 403

வைத்தேன். எனினும் அது மறைந்துவிட்டது. இதுவே நடந்த செயலாம்' எனத் தீமை என்பது தம்மை ஒருபோதும் அணுக முடியாத திருத்தொண்டர் நவின்றார்.

**விளக்கம்**

'இவ்வோடு நீள் நிதியாம்' என சிவயோகிகள் உரைத்தது போலவே நாயனார் கூறியது காண்க. ஆம்! அவர் குணம் எனும் குன்றேறி நின்ற பெரியார் அல்லவா.

இது - ஓடு. பெயர்த்து சரந்தது - இடம் விட்டு மறைந்தது. சேணிடையும்- நெடுந்தொலைவு.

35. திருஉடை அந்த ணாளர்
        செப்புவார் திகழ்ந்த நீற்றின்
    உருவுடை இவர்தாம் வைத்த
        ஓட்டினைக் கெடுத்தீ ரானால்
    தரும் இவர் குளத்தில் மூழ்கித்
        தருக என்று உரைத்தாராகில்
    மருவிய மனைவி யோடு
        மூழ்குதல் வழக்கே என்றார். 394

**பொ.ரை**

(வாதியான சிவயோகியார், பிரதிவாதியான திருநீலகண்ட நாயனார்) ஆகியோரான இருவர் கூறியவைகளையும் கேட்ட தில்லைவாழ் அந்தணர்கள் தீர்ப்புக் கூறுவார்களாய் நாயனாரைப் பார்த்து 'திருஅணிந்த கோலங் கொண்ட இவர் தாமே உம்மிடத்து ஓட்டினைக் கொடுத்தார்; அதனை நீர் தொலைத்து விட்டீர். நீர் கூறுவதை ஒப்புக் கொள்ள அவ்வோட்டினைத் தந்த அவரே உம்மை நும் துணைவியுடன் கரம் பற்றி குளத்தில் மூழ்கி பிரமாணம் செய்யக் கோருகின்றார். அதனைச் செய்து கொடுத்தல் வழக்கமும் கூட. அதுபோல் தாங்கள் செய்து கொடுங்கள்' என்றார்.

மருவிய - அமைத்த. வழக்கு - ஒழுங்கு, நியாயம்.

36. அரும் தவத்தொண்டர் தாமும்
        அந்தணர் மொழியக் கேட்டுத்
    திருந்திய மனைவி யாரைத்
        தீண்டாமை செப்ப மாட்டார்
    பொருந்திய வகையால் மூழ்கித்
        தருகின்றேன் போதும் என்று
    பெருந்தவ முனிவரோடும் பெயர்த்து
        தம் மனையைச் சார்ந்தார். 395

**பொ.ரை**

தலையினால் வணங்கி நின்ற அடியாரைச் சினத்தோடு நோக்கி 'நீ கூறியதுதான் யாது? யான் உனக்குப் பண்டு தந்த மண்ணாலாகிய ஓட்டினைத் தவிர்த்து பொன்னால் நீ ஓடு செய்துதரினும் அதனை யான் ஏற்கிலேன். முன் கொடுத்த ஓட்டினையே கொண்டுவா' என யாவர்க்கும் முன்னோனாகிய அம்முன்னவன் மொழிந்தான்.

**விளக்கம்**

'பிறர் இடம் சென்று இரப்பார் பொன் ஓடு பெற்றிருக்கலாமோ? அதற்கு மண் ஓடே நேரிது. எனவே மண்ணோடே தருக' என உருமாறி வந்த முனிவன் கூறினான்.

செயிர்த்து - சினந்து.

25. கேடுஇலாப் பெரியோய் என்பால்
வைத்தது கெடுதலாலே
நாடியும் காணேன் வேறு
நல்லது ஓர் ஓடுசால
நீடு செல்வது தான் ஒன்று
தருகின்றேன் எனவும் கொள்ளாது
ஊடிநின்று உரைத்தது என்தன்
உணர்வு எலாம் ஒழிந்தது என்ன. 384

**பொ.ரை**

'என்றும் கேடிலாப் பெரியோய்! என்னிடம் நீங்கள் தந்த ஓடு காணாமற் போய்விட்டது. அதனை, எங்கு நன்கு தேடியும் அவ்வோடு கிடைத்திலது. அதனினும் சிறந்ததாயும், மிக நீண்ட நாள்கள் பயன்படத்தக்கதாயும் அமைய ஓர் அழகிய சிறந்த ஓட்டினைத் தந்தருள்வேன் எனக் கூறியபோது பெரியவரான தாங்கள் ஏற்காது சினந்து கூறிய சொற்கள் என் உணர்வு முழுவதினையும் ஒழித்தது' என்றார்.

கெடுதலால் - காணாமற் போனதால். நாடியும் - கவலையோடு தேடியும். சாலநீடு செல்வது - மிக நெடுங்காலம் பயன்படத்தக்கது. ஊடி - சினந்து.

26. ஆவது என் உன்பால் வைத்த
அடைக்கலப் பொருளை வெளவிப்
பாவகம் பலவும் செய்து
பழிக்கு நீஒன்றும் நாணாய்
யாவரும் காண உன்னை
வளைத்து நான் கொண்டே அன்றிப்
போவதும் செய்யேன் என்றான்
புண்ணியம் பொருளாய் நின்றான். 385

**பொ.ரை**

அரிய தவஞ்செய்வாராகிய நாயனாரும் தில்லைவாழ் அந்தணர்கள் கூறியதைக் கேட்டு அவர்களிடம் திருத்தம் பொருந்திய தம் துணைவியாரைத் தாம் தீண்டக் கூடாத நிலையைக் கூறாராகி வழக்கினிலே வென்ற பெருந்தவயோகியைப் பார்த்து, 'தாங்கள் கூறியபடியே யான் செய்து தருவன், வருவீராக' எனச் செப்பி அவருடன் தம் மனையை அடைந்தார்.

திருந்திய - செந்நெறியினின்றும் வழுவாத.

**விளக்கம்**

தாமும் தம் மனைவியும் செய்து கொண்ட சூளுரையை வெளிக் காட்டாமல் நாயனார் இருந்தார். இதுவே நல்ல குடும்பத் தலைவன், தலைவி வாழும் நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு. மலையே பெயரினும் தம் மாண் பினைவிடமாட்டார் சிறந்தோர். இதற்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டு திருநீலகண்டர் வாழ்வாம்.

37. மனைவியார் தம்மைக் கொண்டு
மறைச் சிவயோகியார் முன்
சினவிடைப் பாகர் மேவும்
திருப்புலீச்சுரத்து முன்னர்
நனைமலர்ச் சோலை வாவி
நண்ணித் தம் உண்மை காப்பார்
புனைமணி வேணுந் தண்டின்
இருதலை பிடித்துப் புக்கார். 396

**பொ.ரை**

தம் இல்லிருந்து மனைவியை உடன் அழைத்துக் கொண்டு சிவ யோகியார் முன்னே பிரமாணத்தை நிறைவேற்றும் பொருட்டு இடப வாகன ராகிய சிவனார் எழுந்தருளியுள்ள திருப்புலீச்சுரம் எனும் திருக் கோயில் முன் அமைந்துள்ள மலர்கள் சூழ்ந்த குளத்தினை அடைந்து, தாம் கைக்கொண் டொழுகி வரும் திருவாணையைக் காக்கும் உண்மைத் தன்மையினைக் காப்பாற்றுபவராகி அதற்கு ஊறு நேராவண்ணம் அழகிய சிறுமூங்கிற் தண்டினை எடுத்து இருதலையையும் (இரு நுனிகளையும்) தானும் தன் மனைவியாரும் பற்றிப் பிடித்துக் கொண்டு வாவியினுள் துணிந்து மூழ்கினர்.

**விளக்கம்**

**திருப்புலீச்சுரம்:** சிதம்பரம் நடராசர் திருக்கோயிலின் மேற்குக் கோபுர வாயில் அருகே உள்ள விநாயகப் பெருமான் கோயில் வழியே உள்ள சிவாலயம். வியாக்கிரபாத மாமுனிவர் தம் ஆன்மார்த்த மாய்த்தாபித்தப் பூசை செய்த கோயில். புலிக்கால் முனிவர் பூசித்ததால் புலீச்சுரம் ஆயிற்று. (கணம் புல்லர் தம் முடியையே விளக்காயெரித்துப் பேறுபெற்ற கோயில்.)

**பொ.ரை**

சிவயோகியாக வந்த பெருமானார் தில்லைவாழ் அந்தணர்கள் கூடியுள்ள அந்நல்லவை முன் சென்று 'இந்தக் குயவன் நான் முன் இவனிடம் தந்த பாத்திரத்தைத் திருப்பித் தர மறுக்கின்றான். அதனைக் காணவில்லை எனக் கூறுகின்றான். இஃது உண்மையாயின் அவன்தன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கி சத்தியம் செய்து தரவும் மறுக்கின்றான். எனக்குத் துன்பமும் தருகின்றான்' என்றார்.

தந்தொழியான் - கொடுக்க மறுக்கின்றான். வலி - துன்பம்.

33. நறை கமழும் சடைமுடியும் நால்தோளும் முக்கண்ணும்
கறைமருவும் திருமிடறும் கரந்து அருளி எழுந்து அருளும்
மறையவன் இத்திறம் மொழிய மாமறையோர் உரைசெய்வோர் 392
நிறைஉடைய வேட்கோவர் நீர்மொழியும் புகுந்ததுஎன.

**பொ.ரை**

நறுமணம் கமழும் சடைமுடியினையும் நான்கு தோள்களும், முக்கண்களும், கறையாக விளங்கும் அழகிய திருநீலகண்டத்தையும் மறைத்து வேதியராய் வந்தவர் இவ்வகையாகச் சொல்லிட, பெருமை மிக்க தில்லை மூவாயிரவர் நற்குணங்கள் நிரம்பப் பெற்ற நாயனாரைப் பார்த்து 'வேட்கோவரே! உங்கள் இருவருக்கும் வழக்கு நேர்ந்த முறையைத் தாங்கள் கூறுங்கள்' என்றனர்.

நறை - மணம். கறை மருவும் திருமிடறும் - நீலம் விளங்கும் அழகிய கழுத்து. மறையவன் - சிவன். நிறையுடை - நல்ல குணங்கள் நிறைந்த (இவரை முன்னரே இவர்கள் அறிந்தபடியால்). புகந்தது - நிகழ்ந்தது.

34. நீள் நிதியாம் இது என்று
நின்ற இவர் தரும் ஓடு
பேணி நான் வைத்த இடம்
பெயர்ந்து கரந் ததுகாணேன்
பூண் அணிநூல் மணி மார்பீர்
புகுந்த பரிசு இதுஎன்று
சேண் இடையும் தீங்கு அடையாத் 393
திருத்தொண்டர் உரை செய்தார்.

**பொ.ரை**

'அணியாக நூல் பூண்டுள்ள அழகிய மார்பினை உடைய அந்தணர்களே ஈண்டு நின்றிடும் இவர் என்னிடம் தந்த திருவோடு நீண்ட நிதியைக் கொண்டதாம். அதன் நான் மிகவும் காவல் கொண்ட இடத்தில்தான்

**பொ.ரை**

அயலார் வேறு ஒருவரும் அறியாவகையில் இறைவனது திரு நீலகண்டத் திருவாணையைக் கடவாதுப் பேணிப் போற்றிய வரும், உலக மயக்கில் சிக்காது நீங்கியவருமான திருநீலகண்ட நாயனாரைப் பற்றி யானறிந்த அளவில் வாழ்த்தி அவரின் புராணத்தை நிறைவு செய்து அத்துணையாலே மேகங்கள் தவழ்ந்து தங்கும்படி நீண்டுயர்ந்த மாடங்கள் கொண்ட அழகிய புகார் நகரிலுள்ள வணிகரான பொய்மையற்ற இயற்பகை நாயனார் செய்த திருத்தொண்டினைக் கூறப் போகின்றேன்.

**விளக்கம்**

புகார் எனும் பதிபற்றி ஆளுடைய பிள்ளையார் கூறுவன மிக்க அழகு.

மண் புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலும்
கண்புகார் பிணியறியார் கற்றாரும் கேட்டாரும்
விண்புகாரென வேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்த் சாய்க்காட்டெந் தலைவன்தாள் சார்ந்தாரே - 2.177.1.

(திருப்புறவார்பனங்காட்டூர்; பனையபுரம். நடு நாட்டுத்தலம். இத்தலத்தில் அறுபத்து மூவர் வரிசையில் திருநீலகண்டரும் அவர் துணைவியாரும் ஒருகோல் பற்றிப் பிடித்த நிலையிலுள்ள திருவுருவங்களைக் காணலாம்.)

**திருநீலகண்ட நாயனார்**

தில்லைநகர் வேட்கோவர் தூர்த்த ராகித்
தீண்டிலெமைத் திருநீலகண்ட மென்று
சொல்லு மனை யாடனையேயன்றி மற்றுந்
துடியிடையா ரிடையின்பந் துறந்து மூத்தங்
கெல்லையிலோ புறவைத்து மாற்றி நாங்க
ளெடுத்திலமென் றியம்புமென விழிந்து பொய்கை
மெல்லியலா ளுடன்மூழ்கி யிளமை யெய்தி
விளங்கு புலீச் சரத்தானை மேவினாரே.

- திருத்தொண்டர் புராணசாரம்.

